வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ഈഴനാടു

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 14.08.2024 புதன்கிழமை இதழ் : 227 பக்கங்கள் : 12



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# 13ஐ நடைமுறைப்படுத்தி தமிழரின் சகல பிரச்னைகளையும் தீர்ப்பேன்!

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்!

- தமிழ் பொது வேட்பாளரால் இனமுறுகலே எழும்
- ஏனையோருடன் என்னை ஒப்பீடு செய்யாதீர்கள்



கொழும்பு, ஓக. 14

"நான் ஜனாதிபதியானதும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழ் மக்களின் அனைத்து பிரச்னைகளையும் தீர்ப்பேன்", என்று ரெலோ, புளொட் கட்சிகளிடம் கூறியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவருமான சஜித் பிரேமதாஸ.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸ தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினரை தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்று பொதுக் கட்டமைப்பிலுள்ள அரசியல் கட்சிகளான ரெலோ, புளொட் கட்சிகள் அவரைச் சந்தித்தன. ஏனைய கட்சிகளும் சிவில் அமைப்புகளும் வேலைப்பளு காரணமாக சந்திப்பில் பங்கேற்கவில்லை என்றும் ஜனாதிபதி ரணிலுடனான சந்திப்பில் பங்கேற்ற ஜனநாயக போராளிகள் தரப்பும் அவசரமாக யாழ்ப்பாணம் திரும்பியதால் இந்த சந்திப்பில் பங்கேற்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. 11



# திருக்கோவிலில் மீண்டும் இல்மனைற் அகழ முயற்சி

## மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தம்

திருக்கோவில், ஓக. 14

அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசமான திருக்கோவிலில் மீண்டும் இல்மனைற் அகழ்வதற்கான ஆய்வினை மேற்கொண்டுவந்த அதிகாரிகளிடம் பொது மக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் 11

# ரணிலுக்கு ஆதரவான கூட்டணி உதயமாகிறது!

## அறிவிப்பு இன்று வெளியாகும்

கொழும்பு, ஓக. 14

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான கூட்டணி உதயமாகவுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இந்தக் கூட்டணி உருவாக்கப்படவுள்ளது. 11

# சம்பிக்க, ரிஷாத் சஜித்தின் பக்கம்?

கொழும்பு, ஓக. 14

பாட்டாலி சம்பிக்க ரணவக்க, ரிஷாத் பதியுதீன் தலைமையிலான கட்சிகள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை வழங்கவுள்ளன என்று அறிய வருகின்றது.

ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கடந்த பாராளுமன்றத் 11

# 100 பொதுக்கூட்டங்களை நடத்த கட்சிகள் திட்டம்!

கொழும்பு, ஓக. 14

செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

நாளை வியாழக்கிழமை வேட்புமனுத் தாக்கல் நடைபெறவுள்ளது. வேட்புமனுத் தாக்கலைத் 11

# கட்டுப்பணம் செலுத்துதல் இன்றைய தினமே கடைசி!

கொழும்பு, ஓக. 14

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தும் கால எல்லை இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகிறது.

பிரதான வேட்பாளர்கள் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில், பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளராக போட்டியிடும் 11

# 'பேஸ்புக்' தகவல் திருட்டு மோசடி; உஷாராக இருக்க அறிவுறுத்து!

கொழும்பு, ஓக. 14

பேஸ்புக் ஆதரவு குழுக்களை போன்று பாவனை செய்து மக்களின் தனிப்பட்ட தகவல்களைத் திருடும் மோசடி நடைபெறுகின்றது. இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று தேசிய கணினி அவசர பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் நேற்று முன்தினம் மட்டும் 8 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பேஸ்புக் ஆதரவு குழுக்களாகக் காட்டிக்கொண்டு வட்ஸ்அப் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்புவதன் மூலம் இந்த மோசடி நடக்கிறது. பேஸ்புக் கணக்கு அல்லது பக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக பேஸ்புக் ஆதரவு குழுவிடமிருந்து உங்களுக்கு ஒரு செய்தி வரலாம். அதைத் திரும்பப் பெற, உங்கள் தகவலை சிறிது பணத்துடன் அனுப்ப வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

இது திட்டமிட்ட மோசடி கும்பலின் செயல்பாடு. எனவே, உங்கள் பேஸ்புக் பக்கம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டால் 11

# ரணிலுக்கு ஆதரவை அறிவித்தார் ராஜித எம். பி!

கொழும்பு, ஓக. 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது ஆதரவை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன அறிவித்துள்ளார்.

இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் 11

# கிழக்குப் பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், ஓக. 14

கிழக்கு பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்றைய தினம் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அந்த அறிக்கையில்,

"கிழக்கின் முதுசொமும் தமிழர்களின் அடையாளமுமான திருகோணமலை திருக்கோணேச்சரம் ஆலயத்தை யாப்பு விதிகளுக்கு மாறாக செயல்பட்டு அரசுடைமையாக்க திட்டமிடும் கிழக்கின் 11

# 13இன் நடைமுறை தொடர்பில் ரணிலுடன் பேசியது துரோகம்!

## பொதுக்கட்டமைப்பை சாடுகிறார் கஜேந்திரன்!

வவுனியா, ஓக. 14

தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தியவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தியுள்ளனர். இது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம் - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

மேலும், "பொதுவேட்பாளர் என்பது 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஓர் ஊரில் கிருபானந்த வாரியார் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார்.

அவர் மிகுந்த சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தபோது பாதியில் ஒவ்வொருவராக எழுந்து போய்க் கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்து வாரியார் சொன்னார், "இராமாயணத்தில் அனுமனை சொல்லின் செல்வர் என்று குறிப்பிடுவார்கள். இந்த ஊரிலும் சொல்லின் செல்வர்கள் பலர் இருப்பதைப் பார்க்கிறேன்." என்றார்.

போய்க்கொண்டிருந்தவர்கள் யாரை சொல்லப் போகிறார் என்று தெரிந்து கொள்ள ஆவலுடன் நின்றனர்.

வாரியார் தொடர்ந்தார், "நான் நல்ல பல விசயங்களைச் சொல்லின் அதைக் கேட்காமல் செல்பவரைத் தான் சொல்கிறேன்".

மேலேயுள்ள சம்பவம்தான் அந்தச் செய்தியைப் பார்த்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

"தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய தரப்பினர், ரணில் விக்ரமசிங்கவிடம் சென்று 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேச்சு நடத்தித் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கின்றனர்" என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தாங்கள் என்ன சொன்னாலும் அதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுவிடுவார்கள் என்பதுதான் இவர்களின் நினைப்புப்போலும். தமிழ் மொழிக்கு சில சிறப்புகள் உண்டு. அதனைக் கேட்கின்றபோது அவர் சொல்வது சரிபோலவே தெரியும் - வாரியார் சொன்னதுபோல.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்குகின்ற முடிவை ஒருசில தமிழ் கட்சிகள் மாத்திரம் மேற்கொள்ளவில்லை. நீண்டகாலமாக அந்த முயற்சிக்கு ஆதரவான தமிழ் தேசியக் கட்சிகள் சிலவும் வடக்கு - கிழக்கில் உள்ள முக்கிய சிவில் அமைப்புகள், பொது அமைப்புகள், கடற்றொழிலாளர் அமைப்புகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள், வர்த்தக சங்கங்கள் என்று பல்வேறு தரப்பினரும் ஆராய்ந்து முடிவெடுத்த விடயம் அது.

அது தொடங்கப்பட்டபோது பலரும் "இது வேலைக்கு ஆகாது, ஆண்டிகள் சேர்ந்து மடம் கட்டுகிறார்கள்" என்று நையாண்டி செய்துகொண்டிருந்தபோதிலும் அந்த விடயத்தில் சோர்வின்றி உழைத்து கடைசியில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கினார்கள். ஆய்வாளர் நிலாந்தன் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டதுபோல, தமிழ் மக்கள் மத்தியில் இப்படியொரு கட்டமைப்பு நீண்டகாலத்துக்குப் பின்னர் இப்போது தான் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தலைவர்களோ அல்லது அமைப்புகளோ ஒற்றுமையாக ஒரு விடயத்தை செய்யப்போவதில்லை என்ற நம்பிக்கையில் அதனைக் கண்டுகொள்ளாமல் இருந்த தெற்கின் தலைவர்கள் இப்போது விழித்துக் கொண்டவர்களாக, அதனை இனி எப்படித் தடுக்கலாம் என்று சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்த நிலையிலேயே முதல் ஆளாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தத் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பிலுள்ள பதினான்கு பிரதிநிதிகளையும் பேச்சுக்கு அழைத்தார்.

அவ்வாறு அவர் அழைத்தபோதிலும் அதனை உரியமுறையில் செய்யவில்லை என்றும் அதாவது எதற்காக அழைக்கப்படுகிறார்கள் என்பதைக் கூட கூட்டத்துக்காக தொலைபேசியில் அழைப்பு விடுத்தவர் சொல்லக் கூடிய நிலையில் இல்லை எனவும் அதனால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்றும் பொதுக்கட்டமைப்பிலுள்ள பதினான்கு உறுப்பினர்களும் பேசி முடிவெடுத்திருந்தனர். வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர், உரிய முறையில் அழைப்பு விடுக்கப்பட்டால் பேசுவது என்றும் அவர்கள் முடிவெடுத்திருந்த போதிலும் ஜனாதிபதியுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பில் இருப்பவர்களும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எம். பிக்களை கொண்ட இரண்டு கட்சிகளும் ஜனநாயக போராளிகள் கட்சியும் பொதுக்கட்டமைப்பின் பிரதிநிதிகளாக அல்லாமல் தத்தமது கட்சி பிரதிநிதிகளாக ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருந்தனர்.

அந்தச் சந்திப்பில், அவர்கள் அவரிடம் முதலில் தெரிவித்தது - கடந்த பல தசாப்தங்களாக எங்கள் பிரச்னைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றுக்காகவே நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், அது இதுவரை தெற்கின் தலைவர்கள் எவராலும் கண்டுகொள்ளப்படாததாலேயே, நாங்கள் தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயத்தில் ஈடுபடவேண்டி வந்தது என்றே தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினர். அப்போது ஜனாதிபதியும், "சமஷ்டி அதிகாரத்தை நான் வழங்கமுடியாது. பலம்மிக்க பாராளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில் அது குறித்து பரிசீலனை செய்ய முடியும்" என்று தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் பலமுள்ள பாராளுமன்றம் ஒன்று அமையப் போவதில்லை என்ற நம்பிக்கை ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கலாம். ஆனாலும், அவர் தன்னால் இப்போது செய்யக்கூடியது, பதின்மூன்றாம் அரசமைப்பு திருத்தத்தை அர்த்தபுஷ்டியானதாக அமுல்படுத்துவதுதான் என்றும் அவர் அழுத்தம்திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

அதாவது, இந்த உறுதிமொழிகளுக்காக தமிழ் பொதுவேட்பாளர் களம் இறங்குவது எந்தவகையிலும் தடைப்படவோ அல்லது பாதிக்கப்படவோ போவதில்லை.

இப்படியிருக்கையில், "தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய தரப்பினர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சென்று 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசித் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கின்றனர்" என்று, கஜேந்திரன் வாரியார் பாணியில் கதையளந்திருக்கிறார். பதின்மூன்று தொடர்பில் அதனை அர்த்தபுஷ்டியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு ரணில் மாத்திரமல்லர், சஜித் பிரேமதாஸவும்தான் உறுதியளிக்கிறார். அதற்காக, இல்லை எங்களுக்கு பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்த வேண்டாம் என்று சொல்லச் சொல்கிறாரா என்பது தெரியவில்லை.

அப்படி அமுல்படுத்தப்பட்டு, மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றால் அதில் தாங்கள் கலந்து கொள்ள மாட்டோம் என்று முன்னணியினர் சொல்லத் தயாராக இருந்தால், நாமும் அது தேவை யில்லை என்று சொல்வது பற்றி சிந்திக்கலாம்.

ஆனால், அதற்காக அதனையும் பொதுவேட்பாளர் விடயத்தையும் முடிச்சுப்போட நினைப்பது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதற்கு சமனானது.

**- ஊர்க்குருவி.**

# பெலாரஸில் கைது செய்யப்பட்டோரை இலங்கை அழைத்துவர நடவடிக்கை!

கொழும்பு, ஒக. 14

பெலாரஸ் நாட்டில் கைது செய்யப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் உறுப்பினர்களான கஞ்சிபானை இம்ரான், லொக்கு பெட்டி, ரொட்டம்ப அமில ஆகியோரை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பெலாரஸ் நாட்டின் இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

பெலாரஸ் நாட்டில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த நாட்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் இலங்கையின் குற்ற புலனாய்வு திணைக்களத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதன்படி, குற்றப் புலனாய்வு திணைக்களம் இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சுக்கு தெரியப்படுத்திய தன் பிரகாரம் சந்தேகநபர்களை இலங்கைக்கு அழைத்து வர தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வெளிவிவகார அமைச்சு, பெலாரஸில் உள்ள இலங்கை தூதுவருக்கு அறிவித்தது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர்களான கஞ்சிபானை இம்ரான், லொக்கு பெட்டி மற்றும் ரொட்டம்ப அமில சட்டவிரோதமாக பெலாரஸுக்கு சென்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் முன்னிலைப் படுத்தியுள்ள கடவுச்சீட்டு, வீசா என்பவை போலியானவை என அடையாளம் காணப்பட்டதன் பின்னரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 14

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறிலசிறீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று புதன்கிழமை கந்தரோடை ஓம் சிறீ நாக பூஷணி அம்மன் பஜனை குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 14

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறிலசிறீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவசிறீ சோ. கேதீஸ் வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை பிரதம அதிதியாகவும் சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி செல்வகுமாரி நேசரட்ணம், யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறிகணேசன் ஆகியோர் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில், நவாலி முருகானந்தா அறநெறி பாடசாலை, கட்டுடை அரசடி விநாயகர் அறநெறி பாடசாலை, நாகராஜ இராஜேஸ்வரி அம்பாள் அறநெறி பாடசாலை, இந்து ஆகம நவீன கலை, கலாசார அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தவுள்ளனர். விசேட நிகழ்வாக லாஸ்யமதி கலை மன்றம் வழங்கும் நடன நிகழ்வும் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிலை செய்த சிற்பிக்கு கலாசாலையில் கௌரவம்



யாழ்ப்பாணம், ஒக. 14

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள சரஸ்வதிதேவியின் திருவுருவ சிலையை வடிவமைத்த சிற்பியும் அந்த சிலையை தற்போது, இலவசமாக புனரமைத்து, தீந்தை பூசிய கலாசாலையின் பழைய மாணவரும் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஆசிரியருமான செகராசபிள்ளை செந்தில் வேல் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அண்மையில், நடைபெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதர பத்திரம் வழங்கும் நிகழ்வின்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி. யோன்குயின்ரஸ், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம், தற்போதைய அதிபர் ச.லலீசன் ஆகியோர் இவருக்கான கௌரவத்தை வழங்கினர்.

இந்தச் சிலைக்கான புனரமைப்புப் பணிக்கான நிதி அனுசரணையை இந்த மாதம் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறவுள்ள சேவை உதவியாளர் ஐ. ரவிச்சந்திரன் வழங்கினார்.

சரஸ்வதி தேவியின் திருவுருவச்சிலை 2003ஆம் ஆண்டில் அப்போதைய அதிபர் ஆ. சிறீஸ்கந்தமூர்த்தியின் தலைமையில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்து வைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.08.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆடி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சீவிய அரசியல்

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயத்தில் நகைகள் திருட்டுப் போயுள்ளன என்று குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. இந்த விடயத்தில் விசாரணை வேண்டுமென்று கூறி கிழக்கு மாகாண ஆளுநர் பணிமனைக்கு முன்னால் கோணேஸ்வரர் ஆலய தொண்டர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆலய நிர்வாக சபையை சேர்ந்த ஒரு பகுதியினர் இதனை மறுக்கின்றனர். நகைகள் திருட்டுப் போயுள்ளன என்று கூறப்படுவதில் உண்மையில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். இதனைத் தொடர்ந்து ஆளுநரின் தலையீட்டைக் கோரியும் அதனை எதிர்த்தும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இந்த விடயத்தில் உரிய விசாரணைகள் கட்டாயம் தேவை.

இந்தத் தலைப்பு கவனம் செலுத்தும் விடயமோ வேறு. அதாவது, இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு தங்களின் அரசியலுக்கு ஏதாவது கிடைக்காதா என்று வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியினர் (முன்னணி) உடனடியாகவே ஓர் அறிக்கையை வெளியிட்டு தலையை நீட்டியிருக்கின்றனர். அதாவது, “கிழக்கு பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது”, என்று அவர்கள் ஆர்ப்பரித்திருக்கின்றனர். கிழக்கு நீண்டகாலமாக பறிபோய் கொண்டிருக்கின்றது. வடக்கு வேடிக்கை மட்டுமே பார்த்தது - பார்த்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான வீரவசனங்களைப் பேசுவதற்கு முன்னர் களத்தில் என்ன நடக்கின்றது என்பதை சரியாகப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஈழத் தமிழர் அரசியல் ஆயுதப் போராட்டமாக நீட்சிகொண்ட காலத்திலிருந்து கொழும்பு அதிகார பீடம் கிழக்கை இலக்கு வைத்தே அதன் ஆக்கிரமிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தது. ஏனெனில், அரசியல் ரீதியிலும் - கருத்தியல் ரீதியிலும் கிழக்கு மாகாணமே கொழும்பின் பார்வையில் இருந்தது. தமிழர் தாயகக் கோட்பாட்டை பலவீனப்படுத்த வேண்டுமாயின், கிழக்கின்மீதான கொழும்பின் பிடியை மேலும்மேலும் இறுக்குவதுதான் சிங்கள மேலாதிக்க திட்டமாக இருந்தது. விடயங்களை ஆழமாக அவதானித்தால் வடக்கின் எதிர்ப்பு அரசியலை எதிர்கொள்ளும் பலிபீடமாக கிழக்கு மண்ணே பயன்படுத்தப்பட்டது.

இன்று பெருமளவுக்கு கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் பிடியிலிருந்து பறிபோய்விட்டது. திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்களின் வசம் எதுவுமில்லை. அங்கு தமிழர்களும் வாழ்கின்றனர் என்னும் நிலையிலேயே நிலைமைகள் காணப்படுகின்றன. கிழக்குத் தமிழர்களின் அரசியல் இருப்பைப் பலப்படுத்துவதற்கான பிரத்தியேக திட்டங்கள் எதுவும் தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள் என்போரிடம் இல்லை. உண்மையில், கிழக்கு மாகாணத்தில் அனைவரும் ஓரணியாக இருக்கக்கூடிய அரசியல் கட்டமைப்பு ஒன்றே தேவையானது. ஆனால், அதனை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் ஒன்றிணையவில்லை. முக்கியமாக, அனைத்து ஒற்றுமை முயற்சிகளையும் முதலில் எதிர்க்கும் அணியாக “முன்னணி”யே முன்னணியில் இருக்கின்றது. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் தமிழ்த் தேசிய இனத்தின் அடையாளமாகக் களமிறக்கப்பட்டிருக்கின்றார். ஆனால் முன்னணி, கிழக்கின் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக செயல்பட்டு வருகின்றது. கிழக்கு தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் கரிசனை கொண்டிருப்பவர்கள் கிழக்கு மாகாணத்துக்கான அரசியல் ஐக்கியம் தொடர்பிலேயே முதலில் சிந்திக்க வேண்டும்.

### நல்லூரான் திருவடி - 6

# என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்!

**ஆத்மஜோதி நா. முத்தையா**

ஒரு சிலருக்குப் பைத்தியமாக தம்மைக் காட்டிக்கொண்டார் யோக சுவாமிகள். அவரை முதலில் பைத்தியம் என்று கண்டவர்கள், பின்நாட்களில் தம்மை பைத்தியக் கார்களாகக் கண்டனர். இதுவே, யோக சுவாமிகளின் தனித்துவமான சிறப்பம்சமாகும்.

யோகரின் குருவான செல்லப்பா சுவாமிகளும் தமது சித்து நடவடிக்கைகள் மூலம் ஒரு பைத்தியக்காரன் போன்றே நடந்து கொண்டார். ஆனால், யோக சுவாமிகளுக்கு மட்டுமே குருநாதனாக விளங்கினார். செல்லப்பரை அறியாதோர் அவரை விசர் செல்லப்பர் என்றே அழைத்தனர்.

தம்மை நோக்கி பயபக்தியோடு வந்த அன்பர்களின் உள்ளங்களை தெளிவாக அறிந்திருந்தார் யோகர். சுயநலத்தோடு வருவோரை யோகர் ஒரு போதும் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களது மனதிலிருப்பதை அவர்களிடமே கூறி, அவர்களைத் திருப்பி அனுப்பி விடுவார். தன்னை முழுமையாக நம்பி வந்தோருக்கு ஆறுதல் கூறியும் அறிவுரை கூறியும் அனுப்பி வைப்பார். அத்துடன், நல்லடியார்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆறுதல்களையும் அறிவுரைகளையும் யோகர் வழங்குவார்.



சிறுவயது முதல் முருகனை வணங்கி வந்த எனக்கு இடையில் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அச்சந்தேம் என்னவெனில், சிவனே முழுமுதற்கடவுள். அவரின் புதல்வனே முருகன். எனவே, சிவனையே வணங்குவோம் என்று கருதினேன். இந்த எண்ணத்தோடு ஒரு தடவை யோகரிடம் சென்றேன். நான் சென்றவேளை சுவாமிகளோடு ஒரு சில அடியார்கள் இருந்தனர். சுவாமிகளைக் கண்டதும் வீழ்ந்து வணங்கினேன். “அங்கே இரும்” என்று யோகர் சுட்டிக்காட்டிய இடத்தில் அமர்ந்தேன். சுவாமிகள் என்னை, “இவர் ஓர் உபாத்தியாயர். உபாத்தியாயர் என்றால் குரு. பரமசிவன் வாய் பேசாத குரு. குழந்தை முருகனோ தந்தைக்கு உபதேசித்து குருபரன் என்ற பெயரைப் பெற்றார்.

நல்லைக் கந்தன் சாமானியமானவனா? எத்தனை பேருக்கு அருள்பாலித்துள்ளார். சிவன் கோவில் வேறு. கந்தசுவாமி கோவில் வேறு என்று சிலர் நினைக்கிறார்கள். எல்லாம் ஒன்றுதான் காணும்!

யாதொரு தெய்வம் கண்டீர் அங்கே மாதொரு பாகனார்தாம் வருவார்” என்று யோகர் எனது மனமறிந்து கூறியதைக்கண்டு வியப்போடு மகிழ்ச்சியடைந்தேன்.

ஒருநாள் காலை ஒன்பது மணி இருக்கும். மருதனார்மடத்து சந்தியில் இருந்த கடையில் வெள்ளை வேட்டியை மடித்துக் கட்டியபடி தோளில் வெள்ளை சால்வையைப் போர்த்தபடி கமக்கட்டினுள் குடையோடு, பஞ்சுபோல வெண்மையாக இருந்த தலைமுடியோடும் வெண்மையான தாடியோடும் ஓர் உருவம் காணப்பட்டது. அந்த உருவத்தை அன்று எனக்கு தெரியாது. பக்கத்து கடையிலிருந்த ஒருவர் “யோக சுவாமி வந்து விட்டாரடா. நாம் இனிக் கிளம்புவோம்” என்று கூறியபோதே அந்த உருவம் யோகருடையது என்பதை ஊகித் துக்கொண்டேன். பல மோட்டார் கார்கள் அவ்வழியே வந்தன. வந்த வாகனங்கள் எல்லாம் சுவாமிகளைக் கண்டதும் நின்றன. சிலரிடம் போகு மாறு யோகர் கையசைத்தார். இன்னும் சிலரிடம், “உங்கள் வேலையை பார்ப்பதற்கு வழியில் தெருவில் உள்ள எல்லோரையும் கூட்டிச் செல்வதா?” என்று பெரிய சிரிப்போடு கூறிச் சிரித்தார்.


சிறிது நேரத்தில் ஒரு பெரிய பழைய கார் லொடலொட சத்தத்தோடு வந்து மானிப்பாய் வீதிப்பக்கமாக திரும்பியது. அச்சமயம் அக்கார் சாரதியை நோக்கி, “டேய் நில்லடா” என்று கூறியபடி அக்காருக்கு பின்னால் ஓடினார் யோகர். பின்னர் தாம் மருதடிக்குப் போகவேண்டுமெனக் கூறியதோடு, மருதடிக்கு காரை விடுமாறு கூறினார். அந்த மோட்டார் கார் மருதடியை நோக்கிச் சென்றது. பின்னர் மருதடி

பிள்ளையார் கோவில் முன்பாக நின்றது. சுவாமிகள் பத்து ரூபாய்த் தாளை எடுத்து சாரதியிடம் கொடுத்து, “பெற்றோலை நிறைய ஊற்று” என்று கூறிவிட்டு வேறொரு காரில் ஏறி யாழ்ப்பாணம் சென்றார் யோகர். அக் கார் சாரதியிடம் அவசர தேவைக்காக அன்று பத்து ரூபாய் தேவைப்பட்டதாம். அப்போது யோகர் கொடுத்த அப்பணம் பேருதவியாக இருந்ததை அச்சாரதி உணர்ந்து கொண்டார்.

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**இடபம்**
குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித்தருவார். அமோகமான நாள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**கன்னி**
துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டும். சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படுவீர்கள். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**தனுசு**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**கும்பம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை, சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மீனம்**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகச் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் நிம்மதி உண்டாகும்.

கருணாநிதி உருவம் பொறித்த


# நாணய வெளியீட்டு விழாவில் பங்கேற்க அ. தி. மு. கவுக்கு தி. மு. கவினர் அழைப்பு

சென்னை, ஒக. 14

முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி உருவம் பொறித்த நாணயம் வெளியீட்டு விழா எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க அ. தி. மு. க. பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி, பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோருக்கும் அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மறைந்த தமிழக முதல்வர் மு. கருணாநிதியின் நூற்றாண்டு விழா அரசு சார்பிலும், தி. மு. க. சார்பிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிலையில், கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, அவரது உருவம் பொறிக்கப்பட்ட 100 ரூபாய் பெறுமதியான நாண யம் கடந்த ஜூன் 4ஆம் திகதி மத்திய அரசால் வெளியிடப் பட்டது.

இந்த நாணயத்தை அதிகார பூர்வமாக எதிர்வரும் இம்மாதம் 17ஆம் திகதி சென்னை கலைவாணர் அரங்கில், தமிழக அரசு சார்பில் நடைபெறும்




விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிடுகிறார். இதற்கான ஏற்பாடுகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த விழாவில் முதல்வர் மு. க. ஸ்டாலின், அமைச்சர்கள், தி. மு. க. நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி மற்றும் பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலைக்கும் அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, ரஜினி, கமல் உள்ளிட்ட திரை பிரபலங்கள், பல்வேறு முக்கிய பிரமுகர்களுக்கும் அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது.

(எ)

# இராமரின் புகழை மக்களின் மனதில் பதிய வைத்ததில் கம்பர் முன்னோடி

## தமிழக ஆளுநர் ரவி தெரிவிப்பு

இராமேஸ்வரம், ஒக. 14

இராமரின் புகழ் - வாழ்க்கையை, சாதாரண மக்கள் மனதிலும் கொண்டு சேர்ப்பதில் கம்பர் முன்னோடியாக திகழ்ந்தார் என்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்தார்.

கம்பன் விழா இராமேஸ்வரத்தில் உள்ள தனியார் அரங்கத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதேவேளை, இரா. குலசேகரன் எழுதிய "கம்பனில் இலக்கிய தாக்கம்" நூலை ஆளுநர் ஆர். என். ரவி வெளியிட இலங்கை இ. ஜெயராஜ், முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, கம்பர் புகழை




உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் மத்தியில் பரப்பபெரும் பங்காற்றிய அகில இலங்கை கம்பன் கழகத்தைச் சேர்ந்த இ.ஜெயராஜ்க்கு திருஞானசீலர் என்ற விருதை ஆளுநர் வழங்கி கௌரவித்தார்.

(எ)

# "அ. தி. மு. கவை பற்றிப் பேசுவதை அண்ணாமலை நிறுத்த வேண்டும்"

மதுரை, ஒக. 14

வரலாறு தெரியாதவர்கள் வாய்க்கு வந்ததை பேசுகின்றனர். அண்ணாமலையின் பேச்சுகள், உண்மையான அ. தி. மு. க. தொண்டனின் நெஞ்சில் முள் பாய்ந்ததை போல் உள்ளது. அ. தி. மு. கவை பற்றி பேசுவதை அண்ணாமலை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்- இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஆர். பி. உதயகுமார் தெரிவித்தார்.

மதுரையில் அ. தி. மு. க. உறுப்பினர்களுக்கான அடையாள அட்டையை முன்னாள் அமைச்சர் உதயகுமார் வழங்கினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அண்ணாமலையின் திட்டம் என்னவாகும் என்பது ஆண்டவனுக்குத் தான் தெரியும். ஆனால், அ. தி. மு. க. தொண்டர்கள் இதயத்தில் சுமந்து கொண்டுள்ள திட்டம் அ. தி. மு. கவை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தும். புதிதாக கட்சியை தொடங்கும் யார் வேண்டுமானாலும் ஆட்சியைப் பிடிப்போம் என்று சொல்வார்கள். அதைப்பற்றி அ. தி. மு. கவுக்கு கவலையில்லை.

அ. தி. மு. க. என்பது நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அல்ல- என்றார்.(எ)

# ஓய்வூதியம் ஏன் தாமதம்?



சென்னை, ஒக. 14

"நடப்பாண்டில் கூடுதலாக 80 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்து பல மாதங்கள் ஆகும் நிலையில், இதுவரை அந்த அறிவிப்பு செயல்படுத்தப் படவில்லை. மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதில் தமிழக அரசு செய்யும் தாமதம் கண்டிக்கத்தக்கது"என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தல் இது!

## ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 14

**எதிர்வரும் தேர்தல் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாகும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் தீர்மானமிக்க தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ளது. நெருக்கடியில் வீழ்ச்சியடைந்த நாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தினால் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது.

எனவே நாடு மீண்டும் வீழ்ச்சியடையாதிருக்க வேண்டுமாயின் ஜனாதிபதி இந்த நாட்டை தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல வேண்டும். சிறந்த பொருளாதார முகாமைத்துவத்தை நிர்வகிக்க உலக நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார பொறிமுறைகளின் கீழ் செயற்படவேண்டும்.

அவ்வாறு செயற்படும் பட்சத்திலேயே மீண்டும் ஒரு வங்குரோத்து நிலை ஏற்படுவதிலிருந்து தவிர்க்க முடியும்.எனவே நடைபெறவுள்ள தேர்தலானது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாகும்.எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச்செய்வதற்காக மக்கள்



அணி திரண்டுள்ளனர்.

நாட்டில் ஆட்சியமைக்கும் கனவில் உள்ள பலர் நாடு நெருக்கடியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் தீர்மானங்களை எடுக்க தவறினர். சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரின் இயலாமை கடந்த 2022 ஆம் ஆண்டு வெளிப்படுத்தப்பட்டது-என்றார்.

(அ)

# அனுரவை சந்தித்த பலஸ்தீன தூதுவர்!



கொழும்பு, ஓக. 14

இலங்கைக்காக பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் சைத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவை சந்தித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

பலஸ்தீனத்தின் காஸாவில் இடம்பெறும் படுகொலைகளுக்கு எதிராக குரல் எழுப்பவும் பலஸ்தீனத்துக்கு ஆதரவளிக்கவும் அனுர குமாரவினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கு இதன் போது அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி டகாபூம் கடோனா உள்ளிட்ட பிரதிநிதிகள் சிலரும் அனுர குமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக இலங்கையில் முன்னெடுத்துச் செல்லப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட அவர்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கவும் தாம் தாயாராக வுள்ளதாக இதன்போது தெரிவித்துள்ளனர். (அ)

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வீஸா பெற்றுக் கொள்வதில் சிக்கல்!

கொழும்பு, ஓக. 14

நாட்டுக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட ஏனையோருக்கு, இணையம் ஊடாக விஸா வழங்கல் இடம்பெறாமை காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசா பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டுக்குள் பிரவேசிக்கும் போதே விஸா வழங்கும் பணியிலிருந்து வி.எவ்.எஸ் குளோபல் நிறுவனத்தை நீக்கி, விமான நிலையத்தில் பழைய முறைப்படி விசா வழங்குமாறு உயர்நீதிமன்றம் அண்மையில் உத்தரவு பிறப்பித்தது.

எவ்வாறாயினும் பழைய முறைக்கு விஸா வழங்கும் நடைமுறை இன்னும் ஆரம்பிக்கப்படாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இணையம் ஊடாக விண்ணப்பித்த பயணிகள் விமான நிலையத்தில் விஸாவை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தபால் வாக்களிப்புக்கு 4 நாட்கள் ஒதுக்கப்படும்

கொழும்பு, ஓக. 14

ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்களிப்புக்காக 04 நாட்களை ஒதுக்க தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

தாபால்மூல வாக்களிப்புக்கான உரிய திகதி தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தின் போது தீர்மானிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது கடந்த 09 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

(அ)

# கூட்டு இராணுவப் பயிற்சிக்காக இந்தியப் படை இலங்கை வருகை

கொழும்பு, ஓக. 14

"மித்ரசக்தி" கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்தியப் படையினர் நேற்று முன் தினம் இலங்கை வந்தடைந்தனர்.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே பரஸ்பர நட்புறவை மென்மேலும் விருத்தி செய்யும் முக்கிய படிமுறையாக, வருடந்தோறும் ஏற்பாடு செய்யப்படுகின்ற மித்ரசக்தி போர்ப் பயிற்சி 2024 ஓகஸ்ட் 12 முதல் 25 வரை மாதுரு ஓயா பிரதேசத்தில் நடத்துவதற்குத் எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளவிருக்கும் இந்திய இராணுவ வீரர்கள் நேற்று முன் தினம் மத்தள விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்கு வருகை தந்தனர்.

இந்திய இராணுவப் படையினரை காலாட்படை பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வஜிர வெலகெதர, மித்ர சக்தி இராணுவ பயிற்சி பணிப்பாளர் மேஜர் ஜெனரல் தினேஷ் உடுகம, இலங்கையின் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின்



பிரதிநிதிகள் மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் வரவேற்றனர்.

இப்போர்ப் பயிற்சியில் இந்திய இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கேணல் ரவீந்திர அலவட் தலைமையில் 18 அதிகாரிகளும் 102 சிப்பாய்களும் இலங்கை இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கஜபா படையணியின் 18 அதிகாரிகளும் 102 சிப்பாய்களும் பங்கேற்கவுள்ளனர்.

10 வது தடவையாக இம்முறை இடம்பெறும் இந்த இராணுவப் பயிற்சிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இலங்கையிலும் இந்தியாவிலும் நடத்தப்பட்டுள்ளன.

இரு நாடுகளுக்கிடையே அனுபவப் பகிர்வு மற்றும் நட்புறவு மூலம் பிராந்திய பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவின் பூரண மேற்பார்வையில் இந்த இராணுவப் பயிற்சி நடைபெறுவதுடன், இந்த இராணுவ பயிற்சியின் பணிப்பாளராக 59வது காலாட் படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் தினேஷ் உடுகம செயற்படுகின்றார்.

(அ)

# 2ஆவது நாளாகவும் தொடர்ந்த கிராம அலுவலர் போராட்டம்!

கொழும்பு, ஓக. 14

கிராம உத்தியோகத்தர்கள் நேற்று முன் தினம் ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கை நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

நாட்டின் பல பகுதிகளிலுள்ள கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தமது யோசனைகளை உள்ளடக்காமல் கிராம உத்தியோகத்தர்களுக்கான சேவை யாப்பினை வர்த்தமானியில் வெளியிட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தப் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளதாக கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ஜகத் சந்திரலால் தெரிவித்தார்.

இந்தப் பிரச்னை தொடர்பாக எடுக்கப்படவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று விசேட கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமது பணிப்பகிஷ்கரிப்பினால் தேர்தல் நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாதென அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே கிராம உத்தியோகத்தர்களினால் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கறுப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருடன் நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையாடல் தோல்வியில் முடிந்ததாக கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ஜகத் சந்திரலால் மேலும் கூறினார். (அ)

# ஊழல் அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம்!

## ரஞ்சித் மத்தும பண்டார கூறுகிறார்

கொழும்பு, ஓக. 14

நாட்டில் ஊழல் அரசியல் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் நெருங்கியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

15 ஆம் திகதி வேட்புமனுவை தாக்கல் செய்து நாம் 16 ஆம் திகதி தலதாக மாளிகைக்கு செல்லவுள்ளோம். அதேபோல் இந்து, கிறிஸ்தவ வழிபாட்டுத்தலங்களுக்கும் செல்லவுள்ளோம்.

தேர்தல் தொடர்பான முதலாவது மாநாடு குருணாகலில் இடம்பெறவுள்ளது. சஜித் பிரேமதாச தேர்தலில் அமோச வெற்றியீட்டி இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். நாம் டீல் அரசியலில் ஈடுபடுபவர்கள் அல்லர்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிந்ததும் மொட்டு கட்சியை கைப்பற்றுவோம்!

## எஸ்.எம். சந்திரசேன கூறுகிறார்

கொழும்பு, ஒக. 14

"ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுஜன பெரமுன கட்சியை கைப்பற்றுவோம்." - என்று சூளுரைத்துள்ளார் மொட்டு கட்சியின் ரணில் ஆதரவு பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அநுரகுமார திஸாநாயக்க அநுராதபுரத்தை சேர்ந்தவர், அம்பாந்தோட்டையை சேர்ந்த நாமலும் தற்போது இங்கு வந்துள்ளார், எனக்கு பாடம் கற்பிக்கவே வந்துள்ளாராம், எது எப்படி இருந்தாலும் நாம் ஆதரிக்கும் வேட்பாளரே அநுராதபுரத்தில் நிச்சயம் வெற்றி பெறுவார்.

எமது கூட்டணியில் பிரமாண்ட கூட்டத்தை 17 ஆம் திகதி அநுராதபுரம் நடத்தவுள்ளோம். முடிந்தால் இதுபோன்ற தொரு கூட்டத்தை நடத்திகாட்டுமாறு பொதுஜன பெரமுன கட்சிக்கு சவால் விடுக்கின்றேன். அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 7 தொகுதிகளிலும் ரணில் விக்கிரமசிங்க அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.

மொட்டு கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கமே உள்ளனர், நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய மாட்டோம், அக்கட்சியின்கீழ் பொதுத்தேர்தலில் போட்டியிடவும்மாட்டோம்.

மொட்டு கட்சியின் உண்மையான உரிமையாளர்கள் நாம்தான், 100 வரையான பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது பக்கம் உள்ளனர், பல நெருக்கடிகளுக்கு மத்தியில் நாமே மொட்டு கட்சியை உருவாக்கினோம். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கட்சியை பெறுவோம். அவ்வாறு கட்சி அதிகாரத்தை பெறமுடியாவிட்டால் அந்த பக்கம் உள்ளவர்கள் பெயரளவில் மட்டுமே செயல்பட நேரிடும்.

பிரதமர் தினேஷ் குணவர்தன சிறந்த இடதுசாரி தலைவர், அவர்தான் எமது கூட்டணியின் தலைவர், அவரின் வழிகாட்டலுடன் பொதுத்தேர்தலில் போட்டியிடுவோம்-என்றார். (அ)

# 40 ஆயிரம் கஞ்சா செடிகளுடன் மொனராகலையில் 2பேர் கைது

கொழும்பு, ஒக. 14

மொனராகலை, ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா செடிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மொனராகலை, தனமல்வில பிரதேசத்தில் வசிக்கும் 37 மற்றும் 44 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 40 ஆயிரம் கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக ஹம்பேகமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# கட்டுப்பணத்தை நேற்று செலுத்தினார் திலித் ஜயவீர!

கொழும்பு, ஒக. 14



2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான சர்வஜன சக்தி கூட்டணியின் ஜனா திபதி வேட்பாளராக திலித் ஜய வீரவுக்கு இன்று கட்டுப்பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

திலித் ஜயவீர சார்பில் கலாநிதி ஜீ.வீரசிங்க கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம் மன்பில தலைமையிலான தொழிற்சங்கத்தின் குழுவினர் இதில் கலந்து கொண்டனர். (அ)

# ரூ. 1700 எனக் கூறி 1350 ரூபாவுக்கு மலைய மக்கள் காட்டிக்கொடுப்பு

## திகாம்பரம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 14

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் மலையக அமைச்சரும் ஜனாதிபதியும் பெரும் துரோகம் இழைத்துவிட்டனர் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இதுத்தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு விடயத்தில் மீண்டுமொரு முறை ஏமாற்றப்பட்டுள்ளனர்.

1700 ரூபா சம்பள உயர்வு என தொழிலாளர் தின வாக்குறுதியாக கூறி வர்த்தமானி வெளியிட்டு கொண்டாடி, தற்போது 1350 ரூபாவிற்கு மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை காட்டிக் கொடுத்து விட்டனர்.

இது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகமாகும். ஜனாதிபதி தேர்தலில் மலையக மக்கள் இதற்கான பதிலை கட்டாயமாக வழங்குவார்கள்-என்றுள்ளது. (அ)

# கத்தரிக்கோலால் தாதியை காயப்படுத்திய மருத்துவரை இழப்பீடு வழங்குமாறு உத்தரவு!

கொழும்பு, ஒக. 14

நீரிழிவு நோயாளி ஒருவரின் பெருவிரலை துண்டிக்கும் சத்திர சிகிச்சையை மேற்கொண்ட குருநாகல் பொது வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ஒருவர், நோயாளியின் கால் விரலை துண்டிக்கப் பயன்படுத்திய கத்தரிக்கோலால் தாதி ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பிலான வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், தாதியை காயப்படுத்தியது, அவருடைய அடிப்படை உரிமைகளை மீறிய செயல் என தீர்ப்பளித்துள்ளது.

தாதிக்கு இழப்பீடாக மருத்துவர் தனது தனிப்பட்ட நிதியிலிருந்து ரூ.50,000 வழங்க உத்தரவிடப்பட்டது.

அவருடைய அடிப்படை உரிமைகளை மீறியதற்காக அரசும் தாதிக்கு ரூ.10,000 இழப்பீடாக வழங்க அரசு உத்தரவிட்டது.

மனுதாரரான தாதியர் குருநாகல் பொது வைத்தியசாலையில் பணிபுரிவதாகவும், 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி நீரிழிவு நோயாளியின் பெருவிரலை அகற்றுவதற்கு பிரதிவாதியான விசேட வைத்திய நிபுணர் அறுவை சிகிச்சை செய்ததாகவும் வழக்கு விசாரணையின்போது குறிப்பிடப்பட்டிருந்தது. அறுவைச் சிகிச்சை அரங்கில் நோயாளியின் கால் விரலை துண்டிக்க ஒரு கத்தரிக்கோலை வழங்குமாறு அறுவைச் சிகிச்சை நிபுணர் கூறியது தெரியவந்தது.

அறுவைச் சிகிச்சை செய்த பிறகு, மருத்துவர் கத்தரிக்கோலை மனுதாரரிடம் கொடுத்ததாகவும், அதை அவர் தள்ளுவண்டியில் வைத்ததாகவும் கூறப்பட்டது.

ஆத்திரமடைந்த மருத்துவர், கருவியை தவறான இடத்தில் வைத்ததற்காக தாதியை திட்டி, மனுதாரர் மீது கத்தரிக்கோலை எறிந்து காயப்படுத்தியுள்ளார்.

# மொனராகலை மாவட்ட பெரமுன உறுப்பினர்களும் ரணிலின் பக்கம்!

கொழும்பு, ஒக. 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்க மொனராகலை மாவட்ட பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் மொனராகலை சிலோன்ரிச் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அந்தக் கட்சிகளின் பொதுப் பிரதிநிதிகள் இந்தத் தீர்மானத்தை எட்டியுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 05 மொட்டுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் 04 பேர் கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஸ்பகுமார, விஜித பேருகொட, சுயாஷான் நவனந்த மற்றும் குமாரசிறி ரத்நாயக்க ஆகியோர் ஆவர்.

மொட்டு கட்சி மொனராகலை மாவட்டத் தலைவர் சசீந்திர ராஜபக்ஷ நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கிறார்.

மொனராகலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுனவின் மொனராகலை மாவட்டத் தலைவருமான முன்னாள் அமைச்சர் திருமதி சுமேதா ஜி. ஜெயசிங்கவும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக இந்த நிகழ்வில் இணைந்து கொண்டார். (அ)

# வெகுவிரைவில் ஆரம்பமாகும் ஸ்டார்லிங்க் இணையச் சேவை

கொழும்பு, ஒக. 14

ஸ்டார்லிங்க் லங்கா தனியார் நிறுவனத்திற்கு இலங்கையில் தனது சேவையை ஆரம்பிப்ப தற்கான தொலைத்தொடர்பு சேவை வழங்குநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக் குழுவின் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் 17 பி பிரிவின் கீழ், ஸ்டார்லிங்க் லங்கா பிரைவேற் லிமிட்டெட்டுக்கு செய்மதி இணையச் சேவைகளை வழங்குவதற்காக ஒரு தொலைத்தொடர்பு சேவை வழங்குநர் உரிமத்தை இலங்கை வழங்கியுள்ளதாக அவ் ஆணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உரிமம் இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12ம் திகதி முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஸ்டார்லிங்க் நிறுவனம் தனது செய்மதி இணையச் சேவை வெகுவிரைவில் இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மா ஓயாவை கடக்க முயன்ற நபர் நீரோட்டத்தில் சிக்கி உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 14

நால்ல, கீலம்பிட்டிய பிரதேசத்தில் மா ஓயாவை கடக்க முயன்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 35 வயதுடைய நால்ல, திவுல்தெனிய பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

உயிரிழந்தவர் மற்றுமொருவருடன் மா ஓயாவை கடக்க முயன்ற போது நீரோட்டத்தில் சிக்கி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் வத்துபிடிவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை நால்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் அதிகரித்துள்ள இளம் வயதுக் கர்ப்பம்!

**பாலியல் துஷ்பிரயோகங்களே காரணம் என்கின்றது ஆய்வு**

கொழும்பு, ஓக. 14

**இலங்கையில் மீண்டும் பாலியல் துஸ்பிரயோகம் மற்றும் இளம் வயது கர்ப்பம் என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.**

இந்த ஆண்டில் முதல் காலாண்டில் மாத்திரம் இளம் வயது கர்ப்பம் தொடர்பான 28 வழக்குகள் பதிவாகியுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையின் படி, இந்த இளம் வயது கர்ப்பம் பாலியல் துஸ்பிரயோகத்தின் நேரடி விளைவாக குறிப்பித்தக்க அதிகரிப்பை கண்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு முதல் பாதியில் 28 வழக்குகளும் 2023 ஆம் ஆண்டு அதே காலகட்டத்தில் 18 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இது 55.5 விகித அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

இதனுடன் இணைந்து, பலாத்காரம் மற்றும் கடுமையான பாலியல் துஸ்பிரயோகம் பற்றிய அறிக்கைகளும் தொடர்ந்து அதிகமாகவே உள்ளன.

2024 ஆம் ஆண்டில் மட்டும், இதுவரை 23 பலாத்கார வழக்குகள் பதிவாகியுள்ளன, 2023 இல் பதிவு செய்யப்பட்ட மொத்த 50 வழக்குகளில் கிட்டத்தட்ட பாதி, இந்த ஆண்டு முடியும் முன்னரே பதிவாகியுள்ளது.

ஆகவே இந்த எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கும் வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கூடுதலாக, 2024 இன் முதல் ஆறு மாதங்களில் 157 கடுமையான பாலியல் துஸ்பிரயோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (அ)

# காதலியை பார்க்கச் சென்றவர் கிணற்றில் விழுந்து உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 14

காதலியைத் தேடி இரவு நேரத்தில் அவரது வீட்டுக்குச் சென்ற நபர், அப்பெண்ணின் உறவினர்களிடம் இருந்து தப்பியோடும் போது கிணற்றில் விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பில் இருந்து சிலாபம் தொடுவா பிரதேசத்திற்கு தனது 19 வயதுடைய காதலியை தேடிச் சென்ற 30 வயதுடைய இளைஞனின் சடலம் குறித்த பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்டதாக தொடுவா பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு, திபிரிகஸ்கட்டுவ ஹரிச்சந்திர புர பிரதேசத்தை சேர்ந்த சமித் மதுசங்க என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான குறித்த நபர் தனது மனைவியை பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில் அவர் வசித்து வந்த அதே பகுதியில் உள்ள 19 வயது இளம் பெண் ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளார்.

தங்களுடைய மகள் திருமணமான ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டு வருவதை அறிந்த குறித்த பெண்ணின் பெற்றோர்கள் மகளை, மஹவெவ தொடுவா பிரதேசத்தில் உள்ள உறவினரின் வீட்டில் தங்க வைத்துள்ளனர் .

இது தொடர்பாக தகவல் அறிந்த இளைஞன் கடந்த 10ஆம் திகதி இரவு தனது காதலியை தேடி அவர் தங்கி இருந்த வீட்டருகில் சென்று மறைவாக இருந்துள்ளார்.

வீட்டுக்கு வெளியில் யுவதி சென்றபோது இளைஞன் வந்து அவரை அழைத்துள்ளார். தனது காதலனைக் கண்டதும் அவர் வீட்டுக்குள் ஓடிச் சென்று உறவினர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் அப்போது இளைஞனை பிடிக்க வீட்டில் இருந்த சிலர் துரத்திச் சென்ற போது அவர் இருட்டில் தப்பியோடிய நிலையில் அருகில் இருந்த பாழடைந்த கிணற்றில் ஏதோ விழுந்த சத்தம் கேட்டதாக பெண்ணின் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். (அ)

# எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவி 2 ஆண்டுகளாக கூட்டு பலாத்காரம்

**பஸ் நடத்துநர் உட்பட 5 பேர் கைது**

கொழும்பு, ஓக. 14

எட்டாம் வகுப்பு படிக்கும் பாடசாலை மாணவி இரண்டு ஆண்டுகளாக கூட்டு பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பஸ் நடத்துநர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை, ஹொரண ரெமுன பிரதேசத்தில் வசிக்கும் தனியார் பஸ் நடத்துநர் ஒருவரும், தியகம பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பேரும், குறித்த மாணவியை வீடொன்றில் தடுத்து வைக்க ஆதரவளித்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் திருமணமானவர்கள் எனவும் அவர்களில் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் மாணவி, நோய்வாய்ப்பட்ட பெற்றோர் மற்றும் மூத்த சகோதரருடன் வசித்து வருவதும், வீட்டின் வறுமை காரணமாக, பணம் மற்றும் பிற பொருட்களை கொடுத்து ஏமாற்றி, சுமார் இரண்டு ஆண்டுகளாக மாணவி பலாத்காரத்திற்கு ஆளாகி இருப்பதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட தனியார் பஸ் நடத்துநர் மாணவியை ஒரு மாதத்திற்கு முன்னர் ஹொரணை ரெமுன பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று தடுத்து வைத்து துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் மாணவியிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணையில் மாணவியை நடத்துநர் கடத்திச் செல்வதற்கு முன்னர் குறித்த மாணவி பல வருடங்களாக பல்வேறு நபர்களால் கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

பிரதேசத்திலும் வீட்டிற்கு அருகாமையிலும் உள்ள இடங்களில் குறித்த மாணவி பலாத்காரம் செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மேலும் பலர் கைது செய்யப்பட உள்ளதாகவும் களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கூட்டு பலாத்காரத்துக்கு இலக்கானதாக கூறப்படும் சிறுமியை சட்ட வைத்திய அதிகாரி மிரட்டினாரா?

கொழும்பு, ஓக. 14

22 பாடசாலை மாணவர்களால் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் 16 வயதான பாடசாலை மாணவியின் தாயார், சட்ட வைத்திய அதிகாரி மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை சட்ட வைத்திய அதிகாரி, மருத்துவமனையில் தனது மகளை பரிசோதித்தபோது திட்டி மிரட்டும் வகையில் நடந்து கொண்டதாக, தனமல்வில பகுதியை சேர்ந்த சிறுமியின் தாயார், பொலிஸ் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் முறைப்பாடு செய்துள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரியின் கோபத்துக்குப் பிறகு தனது மகள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக சிறுமியின் தாய் கூறினார். சிறுமி பொய் சொன்னதாக சட்டவைத்திய அதிகாரி குற்றம்சாட்டியதாக தாய் கூறினார்.

மருத்துவமனையில் மேல் தளத்தின் ஜன்னலில் இருந்து குதிக்க தனது மகள் முயற்சித்ததாகவும், ஆனால் அவர் அதை தடுத்ததாகவும் அந்த தாய் கூறினார். பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக முறைப்பாடு அளிக்கப்பட்டதை அடுத்து, சிறுமியை பொலிஸார் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

சந்தேகத்தின் பேரில் 21 மாணவர்களும் ஒரு மாணவியின் தாயும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதோடு, அவர்கள் ஓகஸ்ட் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புகாரின் பேரில் பொலிஸார் விசாரணையை தொடங்கினர்.

முதற்கட்ட விசாரணையின் போது, தான் கூட்டு பலாத்காரம் செய்யப்படுவதற்கு முன்பு கட்டாயப்படுத்தி மதுபானத்தை அருந்த வைக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் அதிகரிக்கும் தடுப்பூசி தட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 14

நாட்டின் மருத்துவமனை அமைப்பில் அத்தியாவசிய தடுப்பூசிகளின் இருப்பு தீர்ந்துவிட்டதாக வைத்தியர் மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஜி.ஜி சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இதனால் நோயாளர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும், மயக்கமடைந்த பின்னர் சுயநினைவை மீட்டெடுக்கும் நியோஸ்டிக்மைன் தடுப்பூசி மருந்து அனேகமான வைத்தியசாலைகளுக்கு கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் விளக்கமளித்தார்.

மேலும், மயக்க நிலையடைய பயன்படுத்தப்படும் லிக்னோகைன் தடுப்பூசி மற்றும் மஞ்சள் காமாளையை தடுக்க நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஹெபடைடிஸ் பி தடுப்பூசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

அவசர இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட நாடளாவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளிலும் இந்த நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற பல அத்தியாவசிய மருந்துகள் மருத்துவமனைகளில் உள்ளன. அவை தற்போது தீர்ந்துவிட்டது என ஜி.ஜி சமல் சஞ்சீவ தெரிவித்தார். (அ)

# ரூபா 4 கோடி பெறுமதியான தங்க பிஸ்கட்டுகள் சிக்கின!

கொழும்பு, ஓக. 14

சட்டவிரோதமான முறையில் நான்கு கோடியே நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான 16 தங்க பிஸ்கட்டுகளை கடத்தி வந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நேற்றுக் காலை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

காலியைச் சேர்ந்த 28 வயதுடைய வர்த்தகரான இவர் அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு வருகிறார்.

அவர் நேற்று காலை 6 மணியளவில் டுபாயிலிருந்து சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்த தங்க பிஸ்கட்டுகள் பொதி செய்யப்பட்டு, மறைத்துக் கொண்டு வந்த பையை விமான நிலையத்துக்கு வெளியே எடுத்துச் செல்ல முயன்றபோது சுங்க அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

வர்த்தகர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மிஹிந்தலையின் விகாராதிபதி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 14

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்குவதாக மிஹிந்தலை மகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவாஹெங்குனுவெவே தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

“நான் எனது தீர்மானத்தை தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கிறேன். இந்த தீர்மானம் அவர் பல வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற பல நிபந்தனைகளுடன் எடுக்கப்பட்டுள்ளது. இந்த தலைவருக்கு அதிகாரத்தை கொடுத்து அவரை செயல்பட வைப்போம்' என தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரை நடுக்காட்டில் அந்தரிக்கவிட்ட இ. போ. ச.

## வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு

வாழைச்சேனை, ஓக. 14

**ஆசிரியர் ஒருவரை நடுக்காட்டில் இறக்கிவிட்டுச் சென்ற இ.போ.ச. பேருந்து தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

கல்முனை - யாழ்ப்பாணம் இடையே சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை - மட்டக்களப்பு சாலைக்குச் சொந்தமான பேருந்தில் பயணித்த கஷ்டப் பிரதேச பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவருக்கே இந்தச் துயரச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஆசிரியர் கூறுகையில்,

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு எல்லைக் கிராமப்புற பாடசாலையான ஜெயந்தியாய அஹமட் ஹிராஸ் வித்தியாலயத்திலிருந்து ஒட்டமாவடிக்கு வருவதற்காக இ. போ. ச. பேருந்தில் பயணித்தேன். அப்போது, இடைநடுவே என்னுடைய பிரயாணப்பை பேருந்திலிருந்து தவறி விழுந்து விட்டது.

அதை நன்கு அவதானித்த சாரதி பேருந்தை நிறுத்தி என்னுடைய பையை எடுத்து வரும் வரையில் காத்து நிற்பதாகச் சொன்னார். நான் அந்தப்பையை எடுக்கச்சென்றதும் யானைகள் நடமாட்டமுள்ள காட்டுக்குள் என்னை தன்னந்தனியே விட்டு சென்று விட்டார்.

உயிருக்கு உத்தரவாதமில்லாத அந்த நடுக்காட்டில் கொளுத்தும் வெயிலில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அச்சத்தோடு காத்திருந்து ஒட்டமாவடி வந்தடையும் துர்ப்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டது.

அதிக பேருந்துகள் பயணத்தில் ஈடுபடாத இப்பாதையில் அரச பேருந்துகளை நம்பி பயணித்து கஷ்டப்பிரதேச பாடசாலைகளுக்கு கற்பிக்கச் செல்கின்ற ஆசிரியரான எனக்கே இவ்வாறான நிலை என்றால், சாதாரண மக்களின் நிலை என்னவாக இருக்கும்?.

இவ்வாறான மோசமான செயல்களில் ஈடுபடும் ஒரு சில சாரதி, நடத்துநர்களால் ஒட்டுமொத்த நிறுவனத்துக்கும் அவப்பெயர் ஏற்படுவதுடன், அரச பேருந்துகளை நம்பி பயணிக்கும் அரச ஊழியர்கள், பொது மக்களுக்கும் அசௌகரியங்கள், நம்பிக்கையீனங்களும் ஏற்படுகின்றன எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் போக்குவரத்து அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் தெரிவித்தார்.

இது தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது- என்றார். (எ)



# திடீர் மழையால் அறுவடை செய்த நெல்லை உலர வைப்பதில் சிரமம்

கல்முனை, ஓக.14

அம்பாறையில் பெய்யும் திடீர் மழையால் சிறுபோகத்தில் அறுவடை செய்த நெல்லை உலர்த்துவதில் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

தாம் அறுவடை செய்த நெல் மழையால் ஈரமுற்ற நிலையில் அவற்றை கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை பிரதான வீதியின் இரு மருங்கிலும் வெயிலில் உலர்த்தி வருகின்றனர்.

பெரும் போகத்தின் போது ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு சிறுபோகத்தில் சிறந்த விளைச்சல் கிடைந்திருந்த போதிலும் இதுவரை நெல் சந்தைப்படுத்தும் சபையால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்படாததால் அரிசி ஆலைகளுக்கே வழங்கி வருகின்றனர். இதனால் பாரிய நஷ்டத்தை விவசாயிகள் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஈரமான நெல்லை மிகக்குறைந்த விலைக்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்வதால் உலர வைக்கும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, நெல்லை உலர வைப்பதற்காகவும் மேலதிக பணத்தை செலவிட வேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)



# வீரமுனைப் படுகொலையின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல்

வீரமுனை, ஓக. 14

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வீரமுனைப் படுகொலையின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலய முன்றலில் மிகவும் உணர்வுபூர்வமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பூ. பரமதயாளன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோ. புஸ்பராஜா, காரைதீவு முன்னாள் பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறில், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மிலேச்சத்தனமான படுகொலை 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி வீரமுனை ஆலயத்தினுள் வைத்து இடம்பெற்றது. (எ)


# மருத்துவர்களுக்கு நியமனக் கடிதம்

கல்முனை, ஓக. 14

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்குட்பட்ட சுகாதார நிறுவனங்களில் கடமையாற்ற இணைத்துக் கொள்ளப்பட்ட மருத்துவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் பொருட்டு புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மருத்துவர்களில் 28 பேர் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்ற மருத்துவர்களுக்கான சேவை நிலையங்களுக்கான கடிதங்கள் கையளித்தல் மற்றும் அறிமுக நிகழ்வு என்பன திங்கட்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.



பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரியும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கல்முனைக் கிளையின் தலைவருமான மருத்துவர் எம். சீ. எம். மாஹிர் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சம்மாந்துறை, நிந்தவூர் மற்றும் திருக்கோவில் ஆகிய ஆதார மருத்துவமனைகளின் அத்தியட்சகர்கள், பிராந்திய பிரிவுத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, மருத்துவமனை அத்தியட்சகர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் தத்தமது பிரிவு தொடர்பான விவரங்களையும் பணிமனை மற்றும் மருத்துவமனைகளில் முன்னெடுக்கப்படுகின்ற சேவைகள், செயற்றிட்டங்கள் தொடர்பான விவரங்களையும் வழங்கினர்.

கல்முனை பிராந்தியத்துக்கு இம்முறை அதிக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து திருக்கோவில் ஆதார மருத்துவமனையின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மேலதிகமாக இரண்டு மருத்துவர்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமித்துள்ளார்

# நிறுத்தல் கருவிகள் பரிசோதனை

கல்முனை,

அம்பாறை மாவட்ட செயலகத்தின் அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினதும் பிரிவினரால் பல்வேறு நிறுத்தல் கருவிகள் பரிசோதனை செய்து சரி பார்த்து சான்றிதழ் வழங்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேச வியாபாரிகளின் நிறுவை - அளவை உபகரணங்களை 2024/ 2025 ஆம் ஆண்டுக்கு சரிபார்த்து முத்திரை பதிப்பதற்கென நேற்று முன்தினம் திங்கட்கிழமை 15 ஆம் திகதி வரையுமான 04 நாட்கள் இந்தச் செயல்பாடுகள் காலை 09. 30 - 03. 30 மணி வரை கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலி அறிவித்துள்ளார்.



எனவே, வர்த்தகர்கள், மீனவர்கள் தங்களுடைய வியாபார அளவை நிறுத்தல் உபகரணங்களை கொண்டு வந்து முத்திரையிட்டுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார். (எ)

# மாகாண ஆணையாளராக மருத்துவர் நபீல் நியமனம்

திருகோணமலை, ஓக. 14

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளராக மருத்துவர் எம். ஏ. நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் பதில் கடமையாற்றும் பொருட்டு அண்மையில் நியமிக்கப்பட்டார். அவர் ஓய்வுபெற்றுச் சென்ற நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்க பிரதி மாகாண ஆணையாளராக கடமையாற்றி வந்த மருத்துவர் எம். ஏ. நபீல் நியமிக்கப்பட்டு நேற்றை தினம் தனது கடமையை திருகோணமலை சுதேச மருத்துவத் திணைக்களத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் வழங்கி வைத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கடவுளை மிகவும் அதிகமாக நம்புகிறேன்

## அமெ. முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்

நியூயோர்க், ஓக. 14

**கடவுள் மறுப்பாளர்கள் கடவுளின் இருப்பைப் பற்றி பரிசீலிக்கலாம். நான் இப்போது கடவுளை நம்புகிறேன். மிகவும் அதிகமாக நம்புகிறேன் என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.**



குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பை நேர்காணல் செய்துள்ளார் எக்ஸ் தள உரிமையாளரும் உலகின் முன்னிலை தொழிலதிபருமான எலான் மஸ்க்.

உலகம் முழுவதும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த நேர்காணல் இலங்கை நேரப்படி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் நடைபெறவிருந்தது. ஆனால், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக குறித்த நேர்காணல் 40 நிமிடங்கள் தாமதமாகவே தொடங்கியது.

'அது ஒரு சதி' - பைடனுடன் நான் மேற்கொண்ட முதல் நேரடி விவாதத்தில் அவரை நான் மிக மோசமாக தோற்கடித்தேன். அதுவே அவர் ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து வெளியேற நிர்ப்பந்தித்தது. அதையும் தாண்டி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து ஜோ பைடன் வெளியேறியது ஒரு சதி. சொல்லப்போனால் அவர்கள் அவரை மிரட்டிப் பணிய வைத்துள்ளனர்.

அன்று துப்பாக்கிச் சூடு நடந்த அந்தத்தருணத்தில் என் காதுகளில் புல்லட் துளைத்தது என்பதை நான் உடனே உறுதிப்படுத்திக் கொண்டேன். நான் மட்டும் என் தலையை சாய்க்காமல் இருந்திருந்தால் அது என் தலையில் பாய்ந்திருக்கும் என்பதையும் உணர்ந்தேன். அந்த நொடியில் நான் அச்சம் கொண்டேன். இருப்பினும் நான் திடமாக இருப்பதாகக் காட்டவே எழுந்த நின்றேன். அந்தத் தருணத்தில் நான் இறைவன் இருப்பதை உணர்ந்தேன். கடவுள் மறுப்பாளர்கள் கடவுளின் இருப்பைப் பற்றி பரிசீலிக்கலாம். நான் இப்போது கடவுளை நம்புகிறேன். மிகவும் அதிகமாக நம்புகிறேன்- என்றார் ட்ரம்ப்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் இருப்பதால் மட்டுமே உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியது. நான் ஜனாதிபதியாக இருந்தபோதும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு உக்ரைன் மீதொரு கண் இருந்தது. ஆனால், நான் தொடர்ந்து போர் வேண்டாம் என்று கூறி வந்தேன்.

இப்போது ரஷ்யா, சீனா, வடகொரியா ஜனாதிபதிகள் விளையாட்டில் உச்சம் கண்டு கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு அவர்கள் நாட்டின் மீது அதீத அன்பு இருக்கிறது. ஆனால், அந்த அன்பு வித்தியாசமானது. இந்தச் சூழலில் அமெரிக்காவுக்கு ஒரு ஸ்திரமான ஜனாதிபதி தேவை. அத்தகையநபரால் மட்டுமே ரஷ்யா, சீனா, வட கொரியாவை சமாளிக்க முடியும்.

அமெரிக்காவுக்கு சரியான ஜனாதிபதி இல்லை. ஜோ பைடன் நிர்வாகம் மோசமாக இருக்கிறது. அவருக்குப் பின் கமலா ஹாரிஸ் ஜனாதிபதியானால் நிலைமை இன்னும் மோசமாகும். கமலா ஹாரிஸ் அமெரிக்காவை அழித்துவிடுவார். அவருடைய பொருளாதார சிந்தனைகள் நாட்டுக்கு கேடு விளைவிக்கும். ஏற்கனவே பண வீக்கத்தால் அமெரிக்க பொருளாதாரம் பெரும் சுமையை சந்தித்துள்ளது. அமெரிக்கர்கள் மத்தியில் சேமிப்பு குறைந்துவிட்டது. மேலும் அமெரிக்கர்கள் கடன் வாங்கி செலவழிக்க ஆரம்பித்துவிட்டனர். கமலா ஹாரிஸ் ஜனாதிபதியானால் இது மேலும் மோசமாகும்.

அதுமட்டுமல்லாது அவர் சட்டவிரோத ஊடுருவல்களை ஆதரிக்கிறார். அவருடைய இந்தக் கொள்கை உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல். ஏற்கனவே அவர்களால் அமெரிக்காவுக்கு அளவுக்கு அதிகமான பிரச்னை உள்ளது- என்றார்.

# துப்பாக்கிகளை உடன் ஒப்படைக்க வேண்டும்

## பங்களாதேஷ் அரசு அறிவிப்பு

டாக்கா, ஓக. 14

ஒரு வாரத்துக்குள் அனைத்து சட்டவிரோத துப்பாக்கிகளையும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று போராட்டக்காரர்களை பங்களாதேஷ் அரசு வலியுறுத்தியுள்ளது.

பங்களாதேஷ் இடைக்கால அரசின் உள்துறை ஆலோசகர் எம். சகாவத் ஹூசைன், மாணவர் போராட்டத்தின்போது காயமடைந்த இராணுவத்தினரை மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "போராட்டத்தின்போது போராட்டக்கார்கள் பொலிஸ் நிலையங்களில் இருந்து துப்பாக்கிகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

எனவே, அனைத்து ஆயுதங்களையும் அவர்கள் ஒரு வாரத்துக்குள் (ஒகஸ்ட் 19 ஆம் திகதிக்குள்) அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்காவிட்டால், அதிகாரிகள் சோதனை மேற்கொள்வார்கள். யாரேனும் அங்கீகரிக்கப்படாத ஆயுதங்களை வைத்திருந்தால், அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படும்- என்றார்.

(எ)

# ரஷ்யாவின் 1000 சதுர கிலோ மீற்றர் உக்ரைன் படையினரின் வசமானது

## 28 கிராமங்களையும் கைப்பற்றினர்

கீவ், ஓக. 14

ரஷ்யாவின் 1000 சதுர கிலோ மீற்றரை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இரண்டரை வருடகால யுத்தத்தில் முதல் தடவையாக உக்ரைன் படையினர் ரஷ்யாவுக்குள் ஊருடுவி தாக்குதலை மேற்கொண்டுள்ள நிலையில் ரஷ்யாவின் 1000 சதுர கிலோ மீற்றரை உக்ரைன் படையினர் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக உக்ரைன் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

கேர்க்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் படையினர் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் கூறினார்.

இதேவேளை, ரஷ்யா யுத்தத்தை ஏனையவர்களின் வாசலுக்கு கொண்டு சென்றது. தற்போது அது ரஷ்யாவின் வாசலுக்கு சென்றுள்ளது என்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைனின் தாக்குதலை பாரிய தூண்டும் நடவடிக்கை என வர்ணித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது நாட்டிலிருந்து உக்ரைன் படையினரை உதைத்து வெளியே அனுப்பப்போவதாகவும் கூறினார்.

ரஷ்யாவின் மேற்கு பிராந்தியத்திலிருந்து பெருமளவு மக்கள் பாதுகாப்புக்காக வெளியேற்றப் பட்டுள்ளனர்.

இதேவேளை, ரஷ்யாவின் 28 கிராமங்கள் உக்ரைன் படையினர் வசம் வந்துள்ளன.

(எ)

# பொருளாதார வளர்ச்சி ஆப்கானில் பூச்சியம்!

காபூல், ஓக. 14

ஆப்கானிஸ்தானில் கடந்த 3 ஆண்டுகளாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி பூஜ்ஜியமாக உள்ளதாக உலக வங்கி எச்சரித்துள்ளது.

தலிபான்கள் ஆட்சியைப் பிடித்து 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் பொருளாதார சிக்கல்கள் அதிகரித்துள்ளன.

அந்த நாட்டில் ஜனாதிபதியாக இருந்த அஷ்ரப் கனியை அகற்றிவிட்டு, 2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினர். இந்த 3 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் தேக்க நிலையில் உள்ளதாகவும், மக்கள் போதுமான சுதந்திரம் இன்றி நெருக்கடியின் பிடியில் உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் சுமார் 4 கோடி மக்கள் வாழும் நிலையில் அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ரொட்டியும், தேநீரும் மட்டும் உண்டு வாழ்வதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஆப்கனில் வேலை வாய்ப்பின்மை மிகப் பெரும் பிரச்னையாக இருப்பதாகவும்,

அதேநேரத்தில், தலிபான்களின் ஆட்சியில் சில சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. பணமதிப்பு ஓரளவு தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருப்பதாகவும், ஊழல் எங்கும் இல்லை என்றும், வரி வசூல் மேம்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் கனிமங்கள் அதிகம் இருப்பதாகவும், விவசாயமும் நன்றாக இருப்பதாகவும் ஆனால் அவற்றை தலிபான் அரசாங்கம் சுரண்ட முயற்சிக்கிறது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. ஆப்கானியர்கள் தங்கள் வாழ்வில் மேம்பட்ட பாதுகாப்பை வரவேற்றாலும், பலர் தங்கள் வாழ்க்கையை வாழ போராட வேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(எ)

# அணு மின் நிலையத்துக்கு ரஷ்ய படைகள் தீ வைப்பு

கீவ், ஓக. 14

முதன் முறையாக உக்ரைன் படைகள் ரஷ்யாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் அணுமின் நிலையத்துக்கு தீ வைத்த சம்பவத்தில் ரஷ்யா, உக்ரைன் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றன.

உலகின் மிகப்பெரிய இராணுவக் கூட்டமைப்பான நேட்டோவில் இணைய முயன்றதற்காக உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்தப் போர் கடந்த இரண்டாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தச் சூழலில் முதன் முறையாக உக்ரைன் படைகள் ரஷ்யாவுக்குள் நுழைந்தன. அங்குள்ள கூர்க்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் படைகள் சரமாரி தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கையாக பொதுமக்கள் 76 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அதேசமயம் கூர்க்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் படை



கள் முன்னேறுவதை தடுக்க ரஷ்யா தனது இராணுவத்தை குவித்து வருகிறது.

இந்த நிலையில் ரஷ்ய இராணுவத்தினர் கைப்பற்றியிருந்த உக்ரைனின் ஜபோரிஜியா (ஐரோப்பாவின் மிகப்பெரிய) அணுமின் நிலையத்தை அழிக்கத் திட்டமிட்டு, ரஷ்ய இராணுவத்தினர் அதற்குத் தீ வைத்தனர். இதனால் கரும்புகை எழுந்து அணுவீச்சு தாக்கும் அபாயம் ஏற்பட்டது. இது போன்ற ஆபத்தான தாக்குதலை ரஷ்யா தவிர்க்க வேண்டும் என உக்ரைன் அரசு தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில், இந்த சம்பவத்துக்கு உக்ரைன் தான் காரணம் என்று ரஷ்யா பதிலுக்கு குற்றம்சாட்டியுள்ளது.

இதனால் ரஷ்யா - உக்ரைன் போரில் பதற்றம் அதிகரித்துள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல சுயேச்சை வேட்பாளர்கள் 'சார்பு' வேட்பாளர்களாவர்!

## மகிந்த தேசப்பிரிய குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 14

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் "சார்பு" வேட்பாளர்களாக பல சுயேச்சை வேட்பாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர் என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

பல சுயேச்சை வேட்பாளர்கள் ஒரு பிரதான வேட்பாளருடன் தொடர்புடையவர்கள் என்பது வெளிப்படையான விடயம் தேர்தலில் வாக்குகளை பெற அவர்கள் சார்பு வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.


என்னால் சுயேச்சை வேட்பாளர்கள் குறித்து மோசமாக எதனையும் தெரிவிக்க முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகின்றார்.

என்னுடைய அனுபவத்தின் மூலம் பல பிரதான வேட்பாளர்களின் சார்பு வேட்பாளர்களாக பல சுயேச்சை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்பதை என்னால் தெரிவிக்க முடியும். ஒரு சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவளிப்பதற்காக அந்தக் கட்சியுடன் நெருங்கிய தொடர்புடைய 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பான எந்த சவாலையும் எதிர்கொள்ள நான் தயார். புதிய விதிமுறைகளின் மூலமே இந்த நிலையை மாற்றியமைக்க முடியும். உள்ளூராட்சி தேர்தல்களில் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடு முறையை மாகாண சபை பொதுத் தேர்தலுக்கும் விரிவாக்க வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

# விஜயமுனி சொய்சா ரணிலுக்கு ஆதரவு!



கொழும்பு, ஒக. 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்க ஆதரவை தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான விஜித விஜய முனி த சொய்சா.

ஜனாதிபதி ரணில் விக்கழரமசிங்கவை திங்கட்கிழமை சந்தித்து ஐக்கிய தேசியக் கட்சியிலும் அவர் இணைந்து கொண்டார்.

இதன்போது, அரசியல் செய்வதற்கு நாடொன்று இருக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார மற்றும் அரசியல் கொள்கையின் காரணமாகவே இன்று நாடு முன்னோக்கிச் செல்வதாகவும், அந்த வேலைத்திட்டத்தின் மூலமே நாட்டை முன்னேற்ற முடியும்.

எனவே, தமது கட்சி உறுப்பினர்களின் ஆசியுடன் எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)




# யூசிமாஸ் தேசிய மட்ட போட்டி திருநெல்வேலி நிலையம் சாதனை!

யாழ்ப்பாணம், ஒக. 14

"யூசிமாஸ்" மனக் கணித தேசிய மட்டப் போட்டியில் திருநெல்வேலி யூசிமாஸ் மாணவர்கள் அதிஉயர் விருதை வென்றனர். அத்துடன், திருநெல்வேலி யூசிமாஸ் நிலையத்திலிருந்து 150 மாணவர்கள் பங்கேற்றதுடன் 80 மாணவர்கள் மெரிட் சித்தியையும் பெற்றுள்ளனர்.

யூசிமாஸ் தேசிய மட்டப் போட்டி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் நாடு முழுவதிலிருந்தும் 2 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில், கிராண்ட் சம்பியன் பி பிரிவில் திருவரன் கேஷிகன், ஈ பிரிவில் உதயகுமார் ரிஷ்வின் ஆகியோர் வென்றனர்.

இதேபோன்று, நிலோஜன் அரோன்ஸ், விதுஷியா மதிவதனன், சுதர்சன் ஹரிபிரசாத் பரமேஸ்வரன் அருணேந்திரன், சயந்தன் தரணிகன் ஆகியோர் சம்பியனாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 42 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 14

யாழ்ப்பாணத்தில் சுமார் 42 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாவுடன் நேற்று முன்னம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் .

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு படகு மூலம் கடத்தி வரப்பட்ட கஞ்சா போதைப்பொருள் அரியாலைப் பகுதியில் உள்ள தென்னம் தோப்பு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இருவரையும் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அரியாலை மற்றும் கிளிநொச்சி பகுதிகளை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து 156 கிலோ கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் 42 மில்லியன் ரூபாய் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# பிரேமலால் ஜயசேகர மீண்டும் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு

கொழும்பு, ஒக் 14

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர மீண்டும் நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.

அவருடன் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி பிரதிநிதிகள் குழுவும் வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதேவேளை, இவர் முன்ன தாக ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவுக்கு ஆதரவ ளிப்பதாக தெரிவித்தி ருந்தார்.



இதேவேளை, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர் தல் பிரசாரக் கூட்டம் எதிர்வ ரும் 21ஆம் திகதி அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# ஒருவர் குத்திக் கொலை!

கொழும்பு, ஒக. 14

இருவரிடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

மொனராகலை - கொட்டியாகலை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 45 வயது நபரே உயிரிழந்தார்.

இந்தக் கொலை சம்பவத்துடன் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கொட்டியாகலை பகுதியைச் சேர்ந்த 27 வயது நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து 366 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஒக. 14

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை 31 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 12 ஆம் திகதி வரை ) 366 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 235 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 120 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (ஐ)

# தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தகம் ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஒக. 14

இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை இலங்கையின் வர்த்தக, வாணிப உணவுப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் தாய்லாந்தின் வர்த்தக அமைச்சர் ஆகியோரால் கடந்த பெப்ரவரி 3ஆம் திகதி கையொப்பமிடப்பட்டுள்ளது. குறித்த உடன்படிக்கை ஜூலை 12ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உடன்படிக்கையின் 14. 10ஆம் பிரிவுக்கமைய உள்ளகச் சட்ட ரீதியான தேவைப்பாடுகள் மற்றும் செயல் ஒழுங்கு விதிகள் முழுமையடைந்துள்ளமையைக் குறிப்பிட்டு ஒரு தரப்பினர் அடுத்த தரப்பினருக்கு மேற்கொள்ளும் இறுதி அறிவித்தலின் பின்னர், இரண்டாம் தரப்பினர் அறிவிப்பதன் மூலம் 30ஆம் நாளிலிருந்து உடன்படிக்கை அமுலாகும்.

இந்த விடயத்தின் அடிப்படையில் இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்று அங்கீகரிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சம்பிக்க...

தேர்தலில் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே கூட்டணி அமைத்தது.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பத்தைத் தொடர்ந்து சில மக்கள் அபிப்பிராய கூட்டங்களை அந்தக் கட்சி நடத்தியது. இந்தக் கூட்டங்களில் பங்கேற்றவர்கள் முன்வைத்த கருத்துகளின் அடிப்படையில் இன்றைய தினம் அந்தக் கட்சி தனது முடிவை அறிவிக்கவுள்ளது.

மக்கள் அபிப்பிராயப்படி, சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவே அதிகப்படியானவர்கள் விரும்புகின்றனர். எனினும், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து ரிஷாத் பதியுதீன் சஜித், ரணிலுடன் இரகசிய பேச்சுகளை நடத்தினார் என்றும் இந்த பேச்சுகளை தொடர்ந்து அவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பார் எனவும் அந்தக் கட்சியின் தலைமைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க, சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

### கட்டுப்பணம்...

நாமல் ராஜபக்ஷ சார்பில் இன்றைய தினமே கட்டுப்பணம் செலுத்தப்படும் என்று தெரிய வருகின்றது.

இதேவேளை, வேட்புமனு தாக்கல் நாளை வியாழக்கிழமை ஏற்றுக்கொள்ளப்படும். காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. (ஐ)

### 100பொது...

தொடர்ந்து பிரசார பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

கருத்துக்கணிப்புகளின்படி முதல் வேட்பாளர் 35சதவீத வாக்குகளையே பெற வாய்ப்புள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்த நிலையில், பிரசாரப் பணிகள் ஆரம்பமாகின்றன.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாக போட்டியிடுகிறார். அவர், எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை அநுராதபுரத்தில் தனது முதல் பொதுக்கூட்டத்தை நடத்தவுள்ளார். தொடர்ந்து, 100 பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 120 பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளார். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை குருநாகலில் முதல் பிரசாரத்தை ஆரம்பிக்கிறார். அத்துடன், தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலையகத் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளிலும் அதிக பொதுக்கூட்டங்களை நடத்த அவரின் கட்சி திட்டமிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அநுரகுமார திஸநாயக்கவும் தனது முதல் பிரசாரத்தை எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிமை ஆரம்பிக்கிறார். முதல் நாளிலேயே காலி, மாத்தறை அம்பாந்தோட்டை என மூன்று இடங்களில் பிரசாரக் கூட்டங்களை நடத்தவுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவும் வடக்கு, கிழக்குக்கு அதிக முன்னுரிமை கொடுத்து பிரசார கூட்டங்களை நடத்துவள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதேநேரம், தமிழ்ப் பொது வேட்பாளர் வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி தனது பிரசார கூட்டங்களை நடத்துவார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

### பேஸ்புக்...

அல்லது செயலிழக்கச் செய்யப்பட் டால் பேஸ்புக் பயனர்கள் வட்ஸ்அப் மூலம் வரும் எந்த செய்திகளுக்கும் பதிலளிக்கவோ அல்லது உங்கள் தகவலை வழங்கவோ வேண்டாம்.

உங்கள் தனிப்பட்ட தகவல் மற்றும் உங்கள் பேஸ்புக் கணக்கு தொடர்பான கடவுச்சொல் உட்பட முக்கியமான தகவல்களை வழங்குவதன் மூலம் உங்கள் பேஸ்புக் கணக்குக்கான அணுகல் வெளி தரப்பினருக்கு அனுமதிக்கப்படும். எனவே, இதுபோன்ற செய்திகளுக்கு பதிலளிப்பதைத் தவிர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

### கிழக்கு...

ஆளுநர் செந்தில் தொண்டமானின் அடாவடிகளை வன்மையாக கண்டிப்பதோடு ஆலய செயல்பாடுகள் சுயாதீனமாக நடைபெற வேண்டும்.

ஆளுநரின் அடாவடிகள் தொடர்ந்தால் வடக்கு - கிழக்கில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

வடக்கும் - கிழக்கும் தமிழர் தாயகம், கிழக்கு பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது என்பதை ஆளுநர் அறிவாராக! அரசின் எலும்புத் துண்டுகளுக்காக தமிழ ரின் வரலாற்று தொன்மைகளை சீரழிக்கும் நிகழ்ச்சி நிரலை கைவிடுமாறு கிழக்கின் ஆளுநரை கோருகின்றோம்." - என்றுள்ளது. (ஐ)

### ரணிலுக்கு...

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று புதன்கிழமை அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டணியில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் இந்தக் கூட்டணியில் இணையவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டணி தொடர்பில் அறிவிப்பதற்கான கூட்டம் கொழும்பு - பத்தரமுல்லையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இன்று புதன்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேலும், இந்தக் கூட்டணியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்துவோர் இணைவர் என்று அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். (ஐ)

### 13ஐ நடைமுறை...

இந்த நிலையில், நேற்று தன்னை சந்தித்தவர்களிடம் கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ,

“நான் ஜனாதிபதியானதும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்னைகளையும் தீர்ப்பேன். நான் இதுவரை அதிகாரத்துக்கு வரவில்லை. இதனால், ஏனையவர்களுடன் என்னை ஒப்பீடு செய்வது சரியான அணுகுமுறையல்ல.

“வடக்கில் நல்லாட்சி காலத்தில் அமுல்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டம் பாதியில் நிற்பதால் பலர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என்று அறிந்துள்ளேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் தோல்வியடைந்ததால் அதனை சரி செய்ய முடியவில்லை. வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்ததும் இந்தப் பிரச்னையையும் தீர்ப்பேன்.

தமிழ் பொதுவேட்பாளர் தேவையற்ற விடயம். இதனால் இலங்கை தீவில் இனரீதியான முறுகல்கள் எழலாம் - என்றும் சஜித் பிரேமதாஸ ரெலோ, புளொட் கட்சிகளிடம் கூறியுள்ளார்.

நேற்று காலை எதிர்க்கட்சித் தலைவரின் பணிமனையில் நடந்த இந்த சந்திப்பில் புளொட் கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன் எம். பி., ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி., கோவிந்தன் கருணாகரம் எம். பி., ரெலோ பேச்சாளர் கு. சுரேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# 27 கட்சிகளின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கு

## பிரபா கணேசனும் இணைவு

கொழும்பு, ஒக. 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு 27 கட்சிகள் இதுவரை ஆதரவு தெரிவித்துள்ளன.

ஏற்கனவே உடன்படிக்கையில் கையொப்பமிட்ட கட்சிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று மாலை நடைபெற்றது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பிரபா கணேசன் தலைமையிலான மனிதநேய மக்கள் கூட்டணி நேற்று கையொப்பமிட்டது. (ஐ)

### திருக்கோவிலில்...

திங்கட்கிழமை திருக்கோவில் விநாயகபுரம் கோரைக் களப்பு முகத்து வாரப் பகுதியில் இடம்பெற்றது.

திங்கட்கிழமை அதிகாலை இல்மனைற் அகழ்வுக்கு பொறுப்பான தம்சியா எக்ஸ்போர்ட் கம்பனி நிர்வாகிகளும் ஊழியர்களும் முகத்துவாரத்தில் கூடினர்.

கள ஆய்வுக்கான இயந்திரம் மற்றும் உபகரணங்களும் கொண்டு வரப்பட்டன.

அங்கு இல்மனைற் அகழ்வதற்கான சாத்தியவள அறிக்கை தயாரிப்பதற்காக இந்தக் குழுவினர் வந்திருப்பதாக தகவல் காட்டுத்தீபோல் பரவியது.

ஒருசில நிமிடங்களில் பொதுமக்களும் அங்கு குவியத்தொடங்கினர்.

அதேவேளை, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், காரைதீவு முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில், சட்டத்தரணி கே. ஜெயசுதன் மற்றும் பலர் ஒன்று கூடினர். பொலி ஸாரும் அதிரடிப்படையினரும் அங்கு நின்றிருந்தனர்.

இதற்கு பிரதேச சபை அனுமதி பெறப்பட்டதா? என்பதை அறிய பிரதேச சபையின் செயலாளர் திருமதி ஜெயந்தி வீர பத்திரண வரவழைக்கப்பட்டார்.

அதன் பின்பு அங்கு பேச்சுகள் இடம்பெற்றன.

அங்கு குறிப்பிட்ட சிலரே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஏனைய பொது மக்கள் சுமார் 500 மீற்றருக்கு அப்பால் பொலிஸாரால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

ஆய்வு தொடர்பில் குறித்த கம்பனி நிர்வாகி, பொறியியலாளர் கூறுகையில், நாங்கள் இங்கே இல்மனைற் அகழ்வுக்காக வரவில்லை. அது தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவே வந்திருக்கிறோம். அகழ்வு என்றால் பிரதேச சபையில் நாங்கள் அனுமதி பெற வேண்டும். ஆனால், இது ஆய்வு. எனவே, பிரதேச சபை அனுமதி தேவையில்லை. நேரடியாக கரையோரம் பேணல் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதி பெற்று வந்திருக்கின்றோம் - என்றார்.

அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், சட்டத்தரணி ஜெயசுதன் ஆகியோர் கூறுகையில்,

மக்கள் விரும்பாத முயற்சியை நீங்கள் தொடர்ந்து செய்கின்றீர்கள். நாங்கள் அதாவது பொது மக்கள் இதனை கடந்த நான்கு ஆண்டுகளாக முற்றாக எதிர்த்து வந்திருக்கின்றோம். இந்த நிலையில் இப்பொழுது தேர்தல் காலம். எனவே, இப்படியான வேளையில் இந்தச் சம்பவம் இன முரண்பாடுகளை, குழப்பங்களைத் தோற்றுவிக்கலாம். இம் முயற்சியை கைவிடுங்கள். எமக்கு இந்த அகழ்வு மற்றும் ஆய்வு தேவையில்லை. இதனை நிறுத்தி விட்டு நீங்கள் பாதுகாப்பாக வெளியேறுங்கள் - என்றனர்.

இதைத் தொடர்ந்து, மக்கள் கடும் எதிர்ப்பையடுத்து இல்மனைற் அகழ்வுப் பணியை கைவிட்டுச் சென்றனர். (எ)

### ரணிலுக்கு ஆதரவை...

நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு கங்காராமையில் நடைபெற்றது.

ராஜித சேனாரட்ன உட்பட பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்ட னர். (ஐ)

### 13இன் நடைமுறை...

என்னைப் பொறுத்தவரையில் திட்டமிட்ட நாடகம். பொதுவேட்பாளர்களை முன்னிறுத்தும் சிவில் அமைப்புகளும் கட்சி சார்ந்தவர்களும் கடந்த 15 வருடங்களாக ஒற்றையாட்சிக்குள் 13ஆம் திருத்த சட்டத்தை திணிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு முழுமையாக உறுதுணையாக செயல்பட்டவர்கள்.

குறிப்பாக, விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் இந்தியாவின் கைக்கூலிகள். இவர்கள் கடந்த காலங்களில் 13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதங்களை அனுப்பியவர்கள்.

13 ஆவது திருத்த சட்டத்தை வலியுறுத்திய தரப்புக்கு விளைவுகள் ஏற்படாமல் இருக்கவும் - மக்கள் மத்தியிலிருந்து வேறுபடாமல் இருக்கவும் - அவர்களை பேணி பாதுகாத்து தொடர்ந்தும் மக்களை அவர்களுடன் வைத்திருப்பதற்கான செயல்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

பொது வேட்பாளர் என்ற ஒருவரை நிறுத்திவிட்டு நேற்றையதினம் (நேற்று முன்தினம்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருக்கின்றனர். குறிப்பாக செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்த்தனுக்கு விசேட நிதி வழங்கப்பட்டுள்ளது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனுக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான வாக்குறுதியை பெற்றுக்கொண்டு வந்திருக்கின்றனர். இவர்கள் செய்தது பச்சை துரோகமான செயலாகும்.

இவர்கள் இந்தியாவின் நலனை பேணக்கூடிய நபர்களுக்கு வாக்குகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையிலும் - இந்த ஆட்சியாளர்களின்மீது அதிருப்தி அடைந்து - ஏமாற்று வேலையை புரிந்து கொண்ட தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்து தேர்தலில் ஒதுங்கி விடக்கூடாது என்பதற்கான நாடகம் தான் பொது வேட்பாளர்.

தற்போது பொதுவேட்பாளராக தெரிவான அரியநேத்திரன் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினராக இருந்து சம்பந்தர், சுமந்திரனோடு இணைந்து அனைத்துத் துரோக செயல்பாடுகளுக்கும் துணை நின்றவர் - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசை எமது பக்கம் இழுப்பதற்கே பொது வேட்பாளராக அரியநேத்திரன்!

## கூறுகின்றார் செல்வம் அடைக்கலநாதன்

கொழும்பு, ஓக. 14

**ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பின் பொது வேட்பாளராக இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அரிய நேத்திரன் தெரிவுசெய்யப்பட்டமை தமிழரசு கட்சியை பொது வேட்பாளர் விடயத்தில் எமது வழிக்கு கொண்டு வரும் ஒரு உத்தியே என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.**

பொது வேட்பாளராக அரசியல் கட்சி சார்பற்ற ஒருவர் நியமிக்கப் படுவார் என ஆரம்பத்தில் கூறப் பட்டது. ஆனால், இறுதியில் தமி ழரசு கட்சியின் உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தமிழ் மக்கள் தமிழ் அரசியல் கட்சி பிரதிநிதிகளிடம் ஒற்றுமை யினை எதிர்பார்க்கின்றார்கள். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்று அவர் கள் விரும்புகின்றார்கள். ஆனால், எங்களிடம் அது இல்லாதிருப்பது கவலைக்குரியது.

இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளராக தமிழரசு கட்சிக்குள் இருந்து ஒருவரை தெரிவு செய்தி ருப்பது என்பது தமிழரசுக் கட் சியை வழிக்கு கொண்டுவரும் உத்தி யாகவே நான் கருதுகின்றேன் - என் றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# விமல் அணி எம்.பியும் ரணிலுக்கு முழு ஆதரவு!

கொழும்பு, ஓக. 14

தேசிய சுதந்திர முன்னணி புத்தளம் மாவட்ட தலை வரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜகத் பிரியந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்து பேச்சு நடத்திய அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் ஜனாதிபதிக்கு தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த விபத்தில் உயிரிழந்த பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, விருப்பு வாக்கு பட்டியலில் அடுத்த இடத்தில் இருந்த ஜகத் பிரி யந்த தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக் கது. (அ)

# இஞ்சி இறக்குமதிக்கு அனுமதி!

கொழும்பு, ஓக. 14

நாட்டுக்கு கட்டம் கட்டமாக இஞ்சியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அந்தவகையில் அடுத்த மூன்று மாதங்களில் 3,000 மெற்றிக் தொன் இஞ்சி இறக்குமதி செய்யப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் கூறினார்.

நிலவும் இஞ்சி தட்டுப்பாடு காரணமாக விதை இஞ்சியை கூட நுகர்வுக்கு பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் அடுத்த மூன்று மாதங்களில் 3000 மெற்றிக் தொன் இஞ்சியை இறக்குமதி செய்வது தொடர் பான அமைச்சரவை பத்திரத்தை அமைச்சு சமர்ப்பித்தி ருந்த நிலையில் நேற்று அமைச்சரவை குறித்த அனுமதி வழங்கி உள்ளது. (அ)

# அனைத்து அரசாங்க துறைகளிலும் சம்பளத்தை திருத்த முன்மொழிவு!

## அமைச்சரவை நேற்று அங்கீகாரம்

கொழும்பு, ஓக. 14

அரச சேவையின் சகல துறைகளிலும் சம்பளத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கு முன்னதாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதன்படி, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் உதய செனவிரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட நிபு ணர் குழு அரச அதிகாரிகள் மற்றும் அரச துறையின் பிரதான தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி உரிய தகவல்களை ஆராய்ந்து அறிக்கையை தயாரித்துள்ளது.

மேற்படி அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பின் வரும் முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற் கும் அதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத் துவதற்கும் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரே ரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# இரு மாணவர் குழுக்கள் மோதல் மாணவனுக்கு தலையில் காயம்!

கொழும்பு, ஓக. 14

அநுராதபுரம் நகரத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இரு மாணவ குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் மாணவன் ஒருவனின் தலையில் பலத்த காயம் ஏற்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மாணவன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த தகராறுக்கான காரணம் இதுவரை கண்ட றியப்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டது. (அ)

# உயிரிழந்த இளம் தாய்க்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்!

மன்னார், ஓக. 14

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்த இளம்தாய் சிந்துஜாவுக்கு நீதி கோரி நேற்று போராட் டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட் டது.

பொது மருத்துவமனையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட இளம் தாய், குருதிப்போக்கு காரணமாக உயிரிழந்தார். அந்த நேரம் கடமையிலிருந்த மருத்துவர்கள் மற்றும் பணியாளர்க ளின் பொறுப்பற்ற செயலே அவரின் மரணத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நிறை வடைந்து விட்டன என்று கூறப்பட்ட போதிலும் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.



இந்தப் போராட்டத்தில் பொதுமக்களுடன் உயிரி ழந்த சிந்துஜாவின் குழந்தையுடன் சிந்துஜாவின் தாயா ரும் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தண்ணீர் கட்டணத்தை குறைப்பதற்கு அனுமதி!

கொழும்பு, ஓக. 14

நீர் கட்டண சூத்திரத்துக்கமைய கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. சமுர்த்தி பயனாளிகள் மற்றும் நகர்ப்புற தோட்ட வீடுகள் தவிர்ந்த வீட்டு அலகுகள் அரச மருத்துவ மனைகள், பாடசாலைகள், வணக் கஸ்தலங்களுக்கு நீர்க்கட்டணங் களைக் குறைப்பதற்கு உத்தேசித் துள்ளதாக அமைச்சரவை பேச்சா ளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப் பிடுகையில்,

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தற் போதுள்ள நீர்க்கட்டணங்கள் 2023.08.01 அன்று தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குறித்த கட்டணங்களை மீளாய்வு செய்வதற்கான கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரத்தை நடைமுறைப்படுத்த கடந்த ஜூலை 15ஆம் திகதி இடம்பெற்ற அமைச் சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதற்கமைய, ஜூலை 16ஆம் திகதியிலிருந்து இலங்கை மின்சார சபை மின்சார கட்டணத்தை குறைத்ததாலும் எரிபொருள், இரசாயன பதார்த்தங்கள் விலை மற்றும் கேள்வி குறைவடைந்திருப் பதை கவனத்தில் கொண்டு நீர்க்கட் டணத்தை ஒரளவு வீதத்தில் குறைப் பதற்கான இயலுமை காணப்படு கின்றது.

இதற்கமைய, பின்வரும் வகை யில் நீர்க்கட்டணங்களைத் திருத் தம் செய்வதற்காக நீர்வழங்கல் மற் றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது.

சமுர்த்தி பயனாளிகள் மற்றும் நகர்ப்புற தோட்ட வீடுகள் தவிர்ந்த வீட்டு அலகுகள் வீட்டு அலகுக ளுக்கு 7 வீதத்தாலும், அரச மருத் துவமனைகளுக்கு 4.5 சதவீதத்தா லும் பாடசாலைகள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கு 6.3 சதவீதத் தாலும் தண்ணீர் கட்டணத்தை குறைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, தேசிய நீர்வழங் கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (திருத்த) சட்டமூலத்தை வர்த்த மானியில் வெளியிடுவதற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# அரச ஊழியர்களின் வேதன திருத்தத்துக்கு அனுமதி!

கொழும்பு, ஓக. 14

அரச சேவையின் சகல துறைகளிலும் வேதனத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிப்பதற் காக நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கு முன்னதாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதன்படி, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் உதய செனவிரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட நிபு - ணர் குழு அரச அதிகாரிகள் மற்றும் அரச துறையின் பிர தான தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி உரிய தகவல்களை ஆராய்ந்து அறிக்கையைத் தயாரித்துள் ளது.

அந்த அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம், 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கும் அதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவ தற்கும் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட பிரேர ணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org